# பரீட்சகரின் அறிக்கை

## திறமை (திறன்கள்) கப்ஸ்ரோன் பரீட்சை – 2017 சனவரி

## (SS2) தகவல் தொழினுட்பவியல் திறன்கள்

இவ்வினாப்பத்திரத்தின் நோக்கமானது பரீட்சார்த்திகளின் தகவல் தொழினுட்பவியல் மீதான ஒட்டுமொத்த அறிவைப் பரீட்சிப்பதும் அதனை அலுவலகச் சூழலில் பயன்படுத்துவதன் மீதான திறன்களைப் பரீட்சிக்கும் அதே வேளை அலுவலகத்தில் பயன்படுத்தும் மென்பொருள் மீது அதிக கவனத்தைச் செலுத்துவதுமாகும். இவ்வினாப்பத்திரத்திற்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு அலுவலகச் சூழலில் தகவல் தொழினுட்பவியல் செயலிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்ற நடைமுறை அறிவு கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

### பகுதி A

இருபது (20) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 40 புள்ளிகள்)

**<u>வினா 01</u>**

ஒட்டுமொத்த தகவல் தொழினுட்பவியல் திறன்கள் பாடவிதானமும் சுருக்கமான ஒரு முறையில் பரீட்சிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந் ததுடன் அவர்களுடைய செயலாற்றுகையும் திருப்திகரமானதாக அமைந்திருந்தன. அவர்களில் அதிகமானவர்களுக்கு பகுதி A இற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட புள்ளிகளைக் பெற முடிந்திருந்தது. சில பரீட்சார்த்திகள் வினா இல. 1.1 முதல் 1.20 வரை சரியான முறையில் இலக்கமிட்டிருக்கவில்லை என்பதுடன் அவர்கள் இடையில் சில வினாக்களுக்கும் விடையளித்திருக்கவில்லை. சில எண்ணிக்கையான விடைத்தாள்களில் 1.1 தொடக்கம் 1.10 வரையான வினாக்களுக்கு சரியான தெரிவின் இலக்கத்தை எழுதுவதற்குப் பதிலாக முழுமையான விடை எழுதப்பட்டிருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. பரீட்சைக்குத் தயார்படுத்தும்போது பரீட்சை வினாக்களின் அமைப்பை நன்கு தெரிந்து கொள்வதற்கும் நேர முகாமைத்துவத்தை விளைதிறனாகக் கையாள்வதற்கான பயிற்சியைப் பெறுவதற்குமாக சில மாதிரி / கடந்தகால வினாப்பத்திரங்களை செய்துபார்க்குமாறு மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வினாவுக்கு உயர்ந்தளவு புள்ளிகளைப் பெறுபவர்கள் வழமையாக ஒட்டுமொத்தத்தில் உயர்ந்தபட்ச புள்ளிகளை பெற்றுக்கொள்பவர்களாகக் காணப்படுகின்றமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமானது.

## பகுதி B

ஏதாவது நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.
(மொத்தம் 60 புள்ளிகள்)

### வினா 02

இங்கு தரவுத்தளம் ஒன்றை எவ்வாறு உருவாக்குவது என்பது தொடர்பான அறிவு பரீட்சிக்கப் பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவைத் தெரிவுசெய்திருந்தனர். அவர்களில் பகுதி (a) மற்றும் பகுதி (b) இற்குப் பெரும்பாலானவர்கள் நன்றாக விடையளித்திருந்தனர். பலர் பிரதான புலத்தினை சரியாகக் கணித்து அடையாளங் கண்டிருந்தனர். எவ்வாறாயினும் பகுதி (c) இற்கான விடைகள் திருப்திகரமானதாக அமையவில்லை. மிகப் பொருத்தமான தரவு வகைகளை அடையாளம் காணும் பகுதி (b) இற்கான வினாவுக்கு சில பரீட்சார்த்திகள் தரவு வகையான string இற்குப் பதிலாக ''பெயர்'' எனவும் நாணய அலகு (currency) என்பதற்குப் பதிலாக ''ரூ.'' அல்லது ''விலை'' என்பன போன்ற விடைகளையும் அளித்திருந்தனர். பிரயோகிக்க கூடிய உதவிக் குறிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் பல பரீட்சார்த்திகள், பகுதி (c) இற்கு சரியான விடைகளை அளித்திருக்கவில்லை. பரீட்சார்த்திகள் அடிப்படை அறிவைக் கொண்டிருந்தனர் ஆயினும் அவர்கள் தொடர்புநிலைத் தரவுத்தளம் பற்றிய விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமானது.

### வினா 03

பவர் பொயின்ட் மென்பொருளைப் பயன்படுத்தி முன்வைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கான ஆற்றல் இங்கு பரீட்சிக்கப்பட்டது. சொற்பளவிலான பரீட்சார்த்திகளே இவ்வினாவினைத் தெரிவு செய்திருந்தனர். அவர்களில் மிகச் சிலரே உப பகுதிகளுக்குச் சரியாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். அதிகளவான சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்ட அம்சங்கள் மற்றும் பட்டி வழிச்செலுத்துகைகளுடன் (menu navigation) தொடர்புடைய விடைகள் தவறானதாகவே காணப்பட்டன. பரீட்சார்த்திகள் இவ்வகை அடிப்படையான முன்வைப்புகளை தயாரிப்பதில் பயிற்சி பெறுவதற்காக அதிகளவான நேரத்தை ஒதுக்குதல் வேண்டும்.

இவ்வினாவுக்கு சொற்பளவானவர்கள் மாத்திரமே உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

### வினா 04

இவ்வினாவானது தெரிவுசெய்யப்பட்ட தொழிற்பாடுகள் மூலம் ஆற்றப்பட்ட பணிகளை சுருக்கமாக விபரிக்கும் வகையில் விரிதாளைப் பயன்படுத்தும் அறிவைப் பரீட்சிப்பதற்காக தயாரிக்கப்பட்டிருந்தது. இவ்வினாவைச் சொற்பளவிலான பரீட்சார்த்திகளே தெரிவுசெய்திருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் பகுதி (a) மற்றும் பகுதி (c) ஆகியவற்றுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர் ஆயினும் ஏனைய பகுதிகளுக்கு வெற்றிகரமாக விடையளிக்கத் தவறியிருந்தனர். வினாக்கேட்கும் அமைப்பு மாற்றத்துடன் சற்று நியாயமான வினாக்கள் இங்கு காணப்பட்டிருந்தபோதிலும் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையானது எதிர்பார்த்ததைப் போல அமையவில்லை. இங்கு போதுமானளவு பயிற்சி இன்மை தெளிவாக வெளித்தெரிகிறது. எனவே பரீட்சார்த்திகள் மைக்ரோசொப்ற் எக்செல் இலுள்ள பணிக்கூறுகள் மூலம் ஆற்றப்படும் பணிகள் தொடர்பில் முற்றுமுழுதான அறிவைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

கையளவு பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்கு உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**<u>வினா 05</u>**

இவ்வினா சிறிய வியாபாரம் ஒன்றினை வெற்றிகரமாக நடத்துவதற்கு இணையமும் அதனோடிணைந்த தொழினுட்பங்களினதும் பயன்பாடு தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. இது விருப்பத்தேர்வு வினாக்களில் பரீட்சார்த்திகளால் மிகவும் முன்னுரிமையளிக்கப்பட்ட வினாவாகும்.

பகுதி (a) இற்கான செயலாற்றுகை மிகவும் திருப்திகரமானதாக அமைந்திருந்தது. எனினும் சில பரீட்சார்த்திகள் இணையத்தில் கிடைக்கக்கூடிய சேவைகளை எழுதுவதில் இடர்ப்பட்டிருந்தனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**<u>வினா 06</u>**

மின்னஞ்சல் நுகர்வியின் அடிப்படை தகவமைவு, அதற்காகப் பயன்படுத்தப்படும் நெறிமுறைகள் பற்றிய அறிவு மற்றும் வெளிச்செல்லும் மின்னஞ்சல்களில் கிடைக்கக்கூடிய தெரிவுகள் போன்றவை இங்கு பரீட்சிக்கப்பட்டன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு முன்னுரிமை வழங்கியிருந்தனர். பகுதி (c) மற்றும் பகுதி (d) இற்கு வெற்றிகரமாக விடையளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் மின்னஞ்சல்களின் தொழினுட்ப வடிவமைப்பு அடிப்படையில் அமைந்த பகுதி (a) மற்றும் பகுதி (b) இற்கு முறையாக விடையளிப்பதற்குத் தவறியிருந்தனர்.

இவ்வினாவுக்கான செயலாற்றுகை மத்திமமானதாகும்.

**<u>வினா 07</u>**

இவ்வினா, தெரிவுசெய்யப்பட்ட செயற்கூறுகளால் ஆற்றப்படும் தொழிற்பாடுகளை சிறு குறிப்புகளாக விபரிக்கும் வகையில் சொல் நிரலாக்கம் மீதான ஆற்றலைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். அவர்களில் பெரும்பாலும் அனைவரும் பகுதி (b) (i) இற்குச் சரியாக விடையளித்திருந்தனர். எனினும், மிகச் சிலரே ஏனைய பகுதிகளுக்குச் சரியாக விடையளித்திருந்தனர். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் அடிக்குறிப்புடன் (Footnote) அடிப்பகுதியையும் (Footer) அதேபோன்று மீத்தொடுப்புடன் (Hyperlink) சொற்பிரிகையையும் (Hyphenation) கலந்து குழப்பி எழுதியிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் மட்டுமே இவ்வினாவுக்கு உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

- - -

## பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்

1. முழுப் பாடத்திட்டத்தையும் ஆழமாகப் படிக்கவும்.

2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.

3. தகவல் தொழினுட்பவியலுடன் தொடர்புடைய பாடப்புத்தகங்கள், நூல்கள் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனையவற்றை வாசிக்கவும்.
4. விடைகளை எழுதும்போது தேவையாயின் உதாரணங்களை வழங்கி, ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தகவல் தொழினுட்பவியலுடன் தொடர்புடைய கோட்பாட்டு ரீதியானதும் செய்முறை ரீதியானதுமான அறிவை சமர்ப்பிப்பது முக்கியமானதாகும்.
5. கையெழுத்து விளங்கக்கூடியதாக இருப்பதையும் விடைகளுக்கு இலக்கமிடப்பட்டிருப்பதையும் உரிய முறையில் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
6. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.
7. கடந்தகால வினாப்பத்திரங்கள், திசைமுகப்படுத்தற் பத்திரங்கள் ஆகியவற்றைச் செய்துபார்த்து உமது அறிவை மேம்படுத்திக்கொள்ளவும்.
8. வினைத்திறனான நேர முகாமை
9. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், விடைகள் சரியாக இலக்கமிடப்பட்டுள்ளனவா என்பதை இருமுறை பரீட்சிக்கவும்.
10. நல்ல தயார்படுத்தலுடனும் சித்தியடைதல் என்னும் நோக்கத்துடன் பரீட்சையினை எழுதவும்.

- * * * -